## வேலம்மாள் மெட்ரிக் பள்ளியின்

# 14ம் ஆண்டு தொடக்க நாள் விழா

**திருவள்ளூர், ஜூன் 23:** பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 14ம் கல்வியாண்டின் தொடக்க நாள் விழா நடைபெற்றது. விழாவிற்கு வேலம்மாள் கல்வி நிறுவன இயக்குனர் எம்.வி.எம்.சசிக்குமார் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் ஜி.ஆர்.சாந்தி முன்னிலை வகித்தார். துணை முதல்வர் சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக சென்னை சேத்துப்பட்டு எம்சிசி பள்ளி தாளாளர் எம்.ஜெ.மனோகரன் கலந்துகொண்டு பேசுகையில், “பெரிய, பெரிய தலைவர்கள் எல்லாம் வகுப்பறைகளில்தான் உருவாக்கப்பட்டு இருக்கிறார்கள். வருங்காலத்தில் நீங்கள் பிரகாசமாக ஜொலிக்க இப்போதிலிருந்தே பொறுப்புடன் செயல்படவேண்டும்” என்றார்.

தொடர்ந்து பள்ளியின் மாணவர் தலைவர், துணைத்தலைவர், விளையாட்டு துறையின் 4 குழுக்களின் தலைவர்கள், பாடம் தொடர்பான குழுக்களுக்கான தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.






▶ பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடந்த 14ம் கல்வியாண்டு தொடக்கவிழாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் தலைவர் மற்றும் பல்வேறு குழுக்களின் தலைவர்களுடன் சேத்துப்பட்டு எம்சிசி பள்ளி தாளாளர் எம்.ஜெ.மனோகரன், கல்வி நிறுவன இயக்குனர் எம்.வி.எம்.சசிக்குமார், பள்ளி முதல்வர் ஜி.ஆர்.சாந்தி, துணை முதல்வர் சீனிவாசன்.